REG. NO. M. 2997.

தனிப்பிரதி அணா 1

RÉPUBLIQUE FRANÇAISE

LIBERTÉ.—ÉGALITÉ.—FRATERNITÉ.

PULSATE ET APERIETUR VOBIS

ஆசிரியர் :
யாழ்ப்பாணம்
தென்கோவை.
ச. கந்தைய பிள்ளை
தமிழ்ப் பண்டிதர்,
சிலோன்.

LE RÉDACTEUR
TENKOVAI
S. CANDIAH PILLAI.
Tamil Pandit
Jaffna
CEYLON.

# VITTAGAM

JOURNAL HEBDOMADAIRE PARAISSANT LE JEUDI

# வித்தகம்

வியாழக்கிழமை தோறும் வெளிவருவது

Bureau de la Direction :—
RUE D'AMBALATADOU AYER
MADAM, NO. 2,
Pondichery.

நத்தம்போற் கேடு முளதாகு[illegible]ாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது.
குறள்.

காரியாலயம் :—
அம்பலத்தாடு ஐயர் மடத்து வீதி,
நெம்பர் 2,
புதுவை.

VOL. II. | புதுவை, பவ ௵ மார்கழி ௴ ௧௯ ௨ (3—1—35) | NO. 6.

## ஔவை குறள்.

### உள்ளுடம் பினிலைமை.

கற்கலாங் கேட்கலாங் கண்ணாரக் காணலாம்
உற்றுடம்பா லாய வுணர்வு.

வெள்ளிபொன் மேனிய தொக்கும் வினையுடைய
உள்ளுடம்பி னாய வொளி.

சென்றுண்டு வந்து திரிதரு முள்ளுடம்
பென்றுங் கெடாத திது.

வருபய னுண்டு மிகிழ்ந்துடனா நிற்கும்
ஒருபயனைக் காட்டு முடம்பு.

அல்லற் பிறப்பை யகற்றுவிக்கு மாய்ந்தாய
தொல்லை யுடம்பின் றொடர்பு.

நல்வினையுந் தீவினையு முண்டு திரிதருஞ்
செய்வினைக்கும் வித்தா முடம்பு.

உள்ளுடம்பின் வாழ்வன வொன்பது மேழைக்
கள்ளவுடம் பாகி விடும்.

பொய்க்கெல்லாம்பாசனமா யுள்ளதற்கோர் வித்தாகு
மெய்க்குள்ளா மாய வுடம்பு.

வாயுவினா லாய வுடம்பின் பயனே
ஆயுவி னெல்லை யது.

ஒன்பது வாசலு மொக்க வடைத்தால்
அன்பதி லொன்றா மரன்.

உ

திருவருள் துணை.

காலமுண் டாகவே காதல்செய்
துய்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப் .
பிரான்றன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின்
றுன்வந்து முந்துமினே.

[திருவாசகம்]

# வித்தகம்

புதுவை,
பவ ஹு மார்கழி மீ 19 உ

## சோம்பித் திரியேல்.

இவ் வேத சூத்திரம் நமது பாட்டியார் அருளிய ஆத்திசூடி என்னும் சூத்திரக் கொத்துள் ஒன்று. இது உலகியலுக்கும் உண்மைநிலைக்கும் ஒப்பிய பொருளை உடையதாகின்றது. முயன்று பொருளீட்டி உயிர் வாழாது சோம்பேறியாய்த் திரியாதே என்பது உலகியலுக்கு ஒப்பிய பொருளாகும். யாவரும் தம்மால் இயன்றவரை முயன்று பொருளீட்டியே வாழுதல் வேண்டும். அல்லாது சோம்பேறிகளாய் வதிந்து பிறர் பால் இரந்தும், இல்லன முகமனு உரைத்து — இச்சை பல பேசிப் பிறரை ஏமாற்றி அவர் பொருள் கவர்ந்தும் உயிர் வாழ்தல் மிக்க கீழ் நிறைப் பொலிவுடைய மாக்கள் நீர்மையே யன்றி ஒரு சிறிதாவது அறிவுடையோர் நீர்மையன்று. இன்ன இழிதகை வாழ்க்கையால் அவமானமும் பழியும் பாவமுமே பல்கி இம்மை மறுமையாகிய இருமையிலும் துன்பமே உளவாகும். புதலுள் மறைந்து வேட்டுவன் புட்களைப் பிடிப்பது போல, போலி வேடம் பூண்டு நடித்துப் பிறர் பொருளை வவ்வி உயிர் வாழ்ந்து சோம்பித் திரிவார் பலர். இவ்வாறு சோம்பித்திரியும் இழிதகை வஞ்சக வாழ்க்கை உடையாரே பூமிக்குப் பொறையாய் உள்ளாரென வற்புறுத்துகின்றது பின் வரும் பாட்டி திருவாக்கு என அறிதல் வேண்டும்.

### மூதுரை.

வாக்குண்டாம்

பிச்சைக்[illegible]த்தகுடிவாழ்க்கைபேசுங்கால்
இச்சைபல[illegible]ால்லியிடித்துண்கை—சிச்சீ
வயிறுவளர்க்கைக்குமானமழியா
துயிர்விடுகைசாலஉறும்.

நீதி நெறியால் ஈட்டிய பொருள் கொண்டு வாழும் வாழ்வே பழி பாவம் இல்லா இன்ப வாழ்வாகும். அறுசுவை உண்டியே எனினும் பிறர் உழப்பால் வருவதாயின் அது முதலில் இன்பம் தருவது போலத் தோன்றினும் பின்பு துன்பம் தருவதே யாகும். கூழே எனினும் தனது உழப்பான் வருவதாயின் அஃது இருமைக்கும் இன்பம் தருவதே யாகும்.

### குறள்.

தெண்ணீ ரடுபுற்கை யாயினுந் தாள்தந்த
துண்ணலின் ஊங்கு இனிய தில்.

(ஷை அதி. 107 இரவச்சம் செ. 5)

என்பது தேவர் வாக்கு.

[தாள்தந்தது — முயற்சி கொடுத்தது — உழப்பான் வந்தது. தெள்நீர் அடுபுற்கை — வறுமையால் சுவையுடைய காயங்கள் இன்றி வெறுநீரில் வாளா அடப்பட்ட உணவு—கூழ். புல்லரிசிக் கஞ்சி எனினும் ஆம். நீர் போல அடப்பட்ட கூழ் என்பாரும் உளர்.]

முயற்சியின்றிச் சோம்புதல் உலகியலுக்கும் உண்மை நிலைக்கும் இழுக்காகும். அதனால் இம்மை மறுமை இரண்டும் கேடடையும்.

### குறள்.

குடியென்னும் குன்றுவிளக்க மடியென்
[னுங்
மாசூர மாய்ந்து கெடும்.

(ஷை அதி. 61 மடியின்மை. செ. 1)

இவ் அரிய பெரிய தேவர் வாக்கு உலகியலுக்கும் உண்மை நிலைக்கும் ஒப்பிய பொருளை உடையதாகின்றது. குடி என்பது உலகியலுக்கு ஒப்பிய பொருளில் பிறந்த குடியையும் உண்மை நிலைக்கு ஒப்பிய பொருளில் அமிர்தத்துவமாகிய நித்தியத்துவத்தையும் உணர்த்தி நின்றது. அதுதான் எம்பெருமான் உடலில் பூரணமாய்க் குடி புகுவதாகும். "குன்று விளக்கம்" எனப்படுவது இதுவே. பூரண ஞானம் என்பது இதுவே. அமல நிறையாகிய அமல ஒளியின் ஆக்கமே எம்பெருமான் குடிபுகுதல் ஆதலால் "குடி என்னும் குன்றுவிளக்கம்" எனப்பட்டது. மடி என்னும் மாசு = சோம்பலாகிய குற்றம் — அழுக்கு. அது தான் அசுத்த நிறையின் காரியமாகிய நிறைமுறை இல்லாப் பற்றுக்களால் வருவதாதலின் "மாசு" எனப்பட்டது. உலகியலாகிய மடியின் மறுதலையாய "முயற்சி" என்பதன் உண்மைப் பொருளும், அதுவே உண்மை நிலைக்கும் உரிய சாதகம் என்பதும் "முயற்சி" என்னும் கட்டுரையில் விளக்கமுற உரைக்கப் பட்டன. ஆங்குக் காண்க. (வித்தகம் தொகுதி 1. இல. 23). இருமைக்கும் கேடு பயப்பது சோம்பலே என்பது இக்குறளால் வலியுறுத்தப்பட்டது. ஆதலால் சோம்பித் திரியாது

முயன்று உயிர் வாழ்தலே உய்யும் திறனாகிய அறத்தாறு என்பது வெள்ளிடை ஆம்.

மேலே "சோம்பித்திரியேல்" என்னும் அமுத வாக்கின் உண்மைப் பொருள் ஒரு சிறிது கூறி இக்கட்டுரை முடிக்கப்படும். குருவருளால் பெறப்படும் உரிய சாதகங்களால் சீவச் செயல் ஒழிந்து வாழக்கடவாய் என்பது உண்மை நிலைக்கு ஒப்பிய பொருளாகும். "திரியேல்" என்பது உலகியலுக்கு ஒப்பிய பொருளில் எதிர்மறையாயும் உண்மை நிலைக்கு ஒப்பிய பொருளில் உடன்பாடாயும் நின்றது. "வித்தகம் பேசேல்" என்பது போல. ("வித்தகம்" தொகுதி 1 இல 51) உலகியலுக்கு ஒப்பிய போலிச் சோம்பலானது தற்சுதந்தரமாகிய முனைப்பால் நிகழ்வது. உண்மை நிலைக்கு ஒப்பிய உண்மைச் சோம்பலானது தற்சுதந்தரமாகிய சீவச் செயல் ஒழிந்தபோது நிகழ்வது. அதுதான் சிவன் செயல் என்பது — திருவருட் செயல் என்பது. "உற்ற ஆக்கையின் உறுபொருள்" ஆகிய சிவபரம் பொருள் உடலகத்துப் பூரணமாய்க் குடிபுக்கபோது—"தான் அவன் ஆகும் சமாதி" கைகூடியபோது சிவன் செயலே நிகழும். சீவச் செயல் நிகழமாட்டாது. அதுவே வாய்மையான "சோம்பல்" என்பது. இப்பேற்றினையே முயன்று அடைய வேண்டும் என்பாராய் "சோம்பித்திரியேல்" என அருளிச் செய்தார் நமது பாட்டியார் என அறிக. தத்துவப்பெரியாராகிய சீவன் முத்தர் எல்லாம் இத்தகைய வாய்மையான "சோம்பல்" உடையவரே ஆவர். பின் வரும் பிரமாணங்கள் வாய்மையான "சோம்பர்" இலக்கணத்தை நன்று விளக்குகின்றன.

### திருமந்திரம்.

இருந்தார் சிவமாகி யெங்குந் தாமாகி
இருந்தார் சிவன்செய லியாவையு நோக்கி
இருந்தார்முக் காலத் தியல்பைக் குறித்தங்
கிருந்தா ரிழவுவந் தெய்திய சோம்பே.

(ஷை 1ம் தந். உபதேசம் செ. 15)

இழவு = தற்சுதந்திர இழப்பு — சீவச் செயலற்றது — சாதனூருச் சாதல். இதனால் உண்மை நிலைக்கு ஒப்பிய வாய்மையான சோம்பலின் இலக்கணம் கூறப்பட்டது.

சோம்ப ரிருப்பது சுத்தவெ ளியிலே
சோம்பர் கிடப்பது சுத்தவெ ளியிலே
சோம்ப ருணர்வு சுருதி முடிந்திடஞ்
சோம்பர்கண் டாரச் சுருதிக்கட் டேக்கமே.

(ஷை ஷை செ. 16)

இதனால் சீவன் முத்தராகிய வாய்மையான சோம்பர் இலக்கணம் கூறப்பட்டது. சுத்தவெளி = அசுத்தமான மாயாப் பிரபஞ்சக் கூட்டம் அற்ற இடம் — ஞானாகாசம். சுத்தஒளி = அமல ஒளி. சுருதி முடிந்த இடம் = நாதாந்தம். "சோம்பர் உணர்வு சுருதி முடிந்திடம்" என்பது அந்தத்தை அணவுவார் என்னும் பொருளுடையது. நாத அந்தமாகிய வேத அந்தத்தை நோக்குபவர் என்பது. அமல நாதமாகிய வாய்மையான சுருதி என்னும் சாமகானத்தைத் தம்முள்ளே கேட்டுப் பேரின்ப நிட்டையாகிய சகச நிட்டையில் இருப்பவர் என்பது போதர "சோம்பர் கண்டார் அச்சுருதிக்கட் டேக்கமே" என்று கூறப்பட்டது. இச் சாமகானமே அருளமுதம் எனப்படுவது. அருளமுதம் உண்ணும் சீவன் முத்தரே நித்தியத்துவம் பெறுபவராவர்.

இத்தகைய உண்மைச் சோம்பலின் இலக்கணத்தை ஒரு சிறிதும் அறியாத மருளுடம்பினராகிய உலக மாக்கள் பலர் தங்களைச் சீவன் முத்தர் என மதித்துச் சோம்பேறிகளாய் வதிந்து ஆகாமியங்களை ஈட்டிச் சேடியூனுடல் ஓம்பிச் சாதலடைந்தமையும் சாதலை எதிர் பார்த்த பாவிகளாய் வீற்றிருத்தலும் வெள்ளிடையாம். இவ்வாறு சோம்பித்திரிந்து இருமையும் கெட்டு அவமாவோர்க்கு நல்லறிவுச் சுடர் கொளுத்துதற் பொருட்டே "சோம்பித்திரியேல்" என்னும் இம் மறைமொழியாகிய மந்திரத்தை அருளினாள் நமது பாட்டி என அறிதற்பாற்று. இவ் வுண்மையே,

"சோம்பர் என்பவர் தேம்பித்திரிவர்"

(கொன்றைவேந்தன்)

என்னும் அமுத வாக்கியத்தாலும் பாட்டியாரால் விளக்கப்பட்டது. இஃதும் உலகியலுக்கும் உண்மை நிலைக்கும் ஒப்பியதாகின்றது. தேம்பல் என்றால் வாடுதல் என்பர். இது உலகியலுக்கு ஒப்பிய பொருளில் வறுமையான் மெலிதலை — வருந்துதலை உணர்த்தி நின்றது. உண்மை நிலைக்கு ஒப்பிய பொருளில் தூலச் சிவை வாட்டமடைதலை — சாதனூருச் சாதலடைதலை உணர்த்தி நின்றது. சாதனூருச் சாதலே வாய்மையான சோம்பல் என்பது பின் வரும் பிரமாணத்தாலும் நன்று புலப்படும்.

### திருமந்திரம்.

"..........................................
ஒத்துப்பொறியுமுடலுமிருக்கவே
செத்துத்திரிவர்சிவஞானியோர்களே."

(ஷை ஞானவேடம் செ. 4)

"செத்துத்திரிவர்" என இம் மந்திரத்தால் கூறப்பட்ட சாதலே சாதனூருச் சாதல் என்பது; சீவச் செயல் சிவன் செயலான தென்பது. இதுவே உண்மைச்சாதல் —உடலை விட்டு உயிர் பிரியாத சாதல். நித்தியத்துவமாகிய அமிர்தத்துவம் அளிப்பது இதுவே. உடலை விட்டு உயிர் பிரிதலாகிய சாதல் உலகியலாகிய போலிச் சாதல் என்பது. இது பிறவி நெறியை அளிப்பது. மேலும் விரிப்பிற் பெருகும்.

இதுகாறும் கூறியவைகளால் "சோம்பித்திரியேல்" என்னும் ஔவையார் அமுத வாக்கின் உலகியலுக்கு ஒப்பிய பொருளும் பாரமார்த்திகமாகிய உண்மை நிலைக்கு ஒப்பிய பொருளும் ஒருவாறு உணரத்தகும்.

சுபம்.

# உடலுயிர்ச் சம்பந்தம்

(தொகுதி 2. 1-ம் வாரத் தொடர்ச்சி.)

### திருமந்திரம்.

உயிரது நின்றா லுணர்வெங்கு நிற்கும்
அயரறி வில்லையா லாருடல் வீழும்
உயிரு முடலுமொருங்கிக் கிடக்கும்
பயிருங் கிடந்துள்ளப் பாங்கறி யாரே.

(ஷை 7ம் தந். கூடாவொழுக்கம் செ. 12)

உடம்பு முடம்பு முடம்பைத் தழுவி
உடம்பிடை நின்ற வுயிரை யறியார்
உடம்பொ டுயிரிடை நட்பறி யாதார்
மடம்புகு நாய்போன் மயங்குகின் றாரே.

(ஷை 8ம் தந். அவத்தைபேதம் கீழாலவத்
[தை 7 செ. )

தானே யெனநின்ற சற்குரு சந்நிதி
தானே யெனநின்ற தன்மை வெளிப்படில்
தானே தனைப்பெற வேண்டுஞ் சதுர்பெற
ஊனே யெனநினைந் தோர்ந்துகொ ளுன்
[னிலே.

(ஷை 7ம் தந். சரீரசித்தியுபாயம் செ. 2)

உடம்பினை முன்ன மிழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்
[டேன்
உடம்புளே யுத்தமன் கோயில்கொண்
[டாரென்
றுடம்பினை யானிருந் தோம்புகின் றேனே.

(ஷை 3ம் தந். சரீரசித்தியுமாயம் செ. 2)

### சுத்த சாதகம்.

தூலவிவ்வுடலைவிடுத்துநில்லாது
சூக்குமஞ்சூக்குமம்விடுத்துத்
தூலநில்லாதீதிரண்டையும்விடுத்துத்
தொல்லுயிர்நிலாதுயிர்விடுத்துத்
தூலசூக்குமகணின்றிடாதுயிருஞ்
சூக்குமமும்முடிவடைந்தால்
தூலமுமுடிவையடைந்திடாதிந்தத்
தொல்லுலகினில்விழுந்திடுமோ.

(செ. 21.)

உடலைவிட்டு உயிர் பிரிந்ததாயின் சேதனம் (உணர்ச்சி, அறிவு) பின்னமடைந்ததேயன்றி அவ்வுயிர் பூரணப்பட்டதென்பது அஃதாவது முத்தியடைந்ததென்பது பொருந்தாது. உடலைப் பிரிந்த உயிர் அத்தகைய பிறிதோர்சம்பந்தத்தையே நாடும். "அயர் அறிவில்லையால் ஆருடல் வீழும்" எனவும் "உடம்பா ரழியின் உயிரா ரழிவர், திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவும் மாட்டார்" எனவும் வரும் திருமூலர் திருவாக்குக்கள் இவ்வுண்மையை நன்கு புலப்படுத்தும். "மேலொரு வடிவை யெடுத்ததேயாகின் மேவு மிவ்வுடலிங்கே வீழும்" என அம்பிகை அருளால் எழுந்த சுத்த சாதகம் கூறியதும் அறிக. (செ.19) தேகத்தில் விளங்கும் அசைவு சீவ அசைவாகும். இருவினையால் அசைவு உளதாயிற்று. சீவ அசைவு இல்லாத விடத்துப் பஞ்சேந்திரிய வினையில்லை. அசைகின்றது அசையாவிடில் அசைவு இறந்ததென்று கூறலாம். அஃதாவது சத்தும் சித்துமாகிய மெய் உயிர் அற்றன என்பது. சத்தசைவு சித்தசைவு (சத்தொலி சித்தொலி) என்னும் இரண்டு அசைவும் அற்றதே சாதல் — மரணம் எனப்படும். இவ்அசைவு அற்ற அசத்தாகிய பிணம் உடல், சரீரம், மெய் என்ப்படுதல் உபசார வழக்காகிய போலிவழக்கே யாகும். மெய் என்றபோதே உயிர் உண்டு. உயிராகிய இயக்கம் உண்டு. இதனைத்தான் சத்தொலி என்பர் வித்தகர். மலர்ந்தபோது சித்தொலி விளக்கம் உண்டு. வாயை மூடியிருக்கும் போது அஃதாவது வாளா இருக்கும் போது அசைவு உண்டோ? உண்டு. அவ்அசைவுதான் கௌண இயக்கம்—உள் இயக்கம் எனப்படுவது. அது "ம்" என ஒலிக்கும். இதுதான் சத்தொலி. இது "மா" என மலர்ந்தபோது சித்தொலி—உயிரொலி விளக்கம் உண்டு. மகரமெய் "ம்" என உச்சரிக்கப்படும்போது — வெளியே சொல்லப் படும்போது "இம்" என இகரத்தைத் தழுவியே ஒலிக்கும். மற்றைய மெய்களும் இவ்வாறே ஒலிக்கும். இ என்பது சத்தி. இது மெய்யினுள் அடங்கி நிற்கும், மலர்ந்தபோது மணம் உண்டு. ஆதலால் சத்தொலி சித்தொலி என இரண்டாக வசனிக்கப்படும். சத்தொலி என்பது சத்துயிர். சித்தொலி என்பது சித்துயிர். இரண்டுயிர் — இரண்டசைவு உண்டு. இவை சத்தியும் சிவமும் என இரண்டாகும். வியாபகத்தில் இரண்டு எனப்படும். வியாப்பியம் என்னும் ஒடுக்கத்தில் "ம்" என்னும் ஒலி ஒன்றே உள்ளது. அம் மகர ஒற்றில் இகர வுயிர் தொனிக்காமல் தொனிக்கும். சத்தியும் சிவமும் பிரிபடாதன என்பதும் இதுவே. தாமத இயக்கம் மெய் எனப்படும். அதிக நிறை கொண்ட இயக்கம் — துரித இயக்கம் உயிர் எனப்படும். இயக்கம் என்பதில் இரண்டு தன்மை உண்டு. இயக்கம் என்பது அசைவு. அசைவு என்பதில் சத்தம் உண்டு. அசைவினால் உண்டானது சத்தம். சத்தம் அவ்அசைவில் அடங்கியுள்ளது. இரண்டில்லாமல் சத்தம் இல்லை. இரண்டும் ஒன்றுக்கு மற்றொன்று அதிகமாக நிறை பெறுவதே நீண்டது — விரிந்தது — மலர்ந்தது என்ப. இதனால் இரண்டு என்பது தெரிந்தது. இரண்டும் சமரசநிறை பெற்றால் இரண்டும் இல்லை. இரண்டும் உண்டு. இரண்டும் ஒன்றுபட்டது. ஒன்றுபட்டது என்றதனால் இரண்டாக இருந்தமை தெரிந்தது. விரிந்தது ஒன்றாகி நின்றால் — சேர்ந்தால், அந்

நிற்றல் – சேர்தல் என்பதனால் மூன்றுவது உண்டாவது. இவை தாம் மூன்று அசைவான தீ — அக்கினி. சத்தசைவாகிய தீ. சித்தசைவாகிய தீ. இவ்விரண்டும் ஒன்று சேர்தல் — சமரச நிறைபெறுதல் என்பதும் ஒரு அசைவானதால் அதுவும் ஒரு தீ — உஷ்ணம் எனப்படும். சமரசமானதால் இரண்டும் இல்லை— இரண்டும் கெட்டது. கெட்டபோது அஃதாவது இரண்டனுடைய செயல் – இயக்கம் சமரசப்பட்டு நிறை பேதிக்காமல் ஒன்றிய போது, அவ் ஒன்றுதல் என்பதிலேயே மூன்றுவது உண்டாயிற்று. இதுவே மூன்றுதீ-முத்தீ-முத்தி என்பது. இவற்றால் இருவினை சொரூபமாகிய உடலுயிர் பிரிபடாது சமரசமாய்க் கெட்டுத் திரிந்து ஒன்றுவதே—ஒடுங்குவதே உண்மைச் சைவமுத்தி நிலை என்பது வெள்ளிடைமலையாம். இருவினையும் கெட்டுத் திரிந்த போது இருவினை சொரூபமாகிய உடல் உயிர் இல்லையாகும். அஃதாவது உடல் சூக்குமமாய் அருள்வடிவாகும் — சத்தி வடிவாகும். அதனைப் பிரியாது அநாதியே அதனோடு சம்பந்தமாகிய உயிர் சிவமாகும் (சிவாங்கமாகும்) என்பது. இதுவே இயற்கை முறையான உண்மைச் சைவமுத்தி என அறிக. "ஊசலாட்டும் இவ் உடல் உயிராயின இருவினையறுத்து......உணர்வு தந்து ஒளியாக்கி" (திருவாசகம்) எனவும் "ஊன் உயிர் வேறு செய்தான்" (சுந்தரர் தேவாரம்) எனவும் வரும் பிரபலதெய்வச்சுருதிகளின் உண்மைப் பொருளையும் நோக்குக. ஊன் அருள் வடிவாகவும் உயிர் சிவமாகவும் (சிவாங்கம்) மாற்றமடையும் என்பதே "ஊனுயிர் வேறு செய்தான்" என்பதன் பொருளாகும். சித்தாகிய உயிர் சுத்தமடைந்து சிவம் (சிவாங்கம்) ஆகும்போது அநாதியே அதனோடு சம்பந்தமுடையதாய் அமலமடைந்த சத்தாகிய உடல் எத்தன்மையை அடையவேண்டும்? அதுவும் சிவாங்கமாகிய அவ் உயிரோடு சம்பந்தமுடையதாய் அதனைப் பிரியாது அருள் வடிவான சத்தி யம்சமாகவே திகழும் என்பது சொல்லாமலே அமையும். பின்வரும் சுத்த சாதகச் செய்யுட்களும் இவ்வுண்மையை நன்கு புலப்படுத்தும்.

### சுத்தசாதகம்.

இருள்வடிவதுவமருள்வடிவதனி
லெய்தியேமறைந்திடுமிந்த
மருள்வடிவதுவும்மவ்வடிவதனின்
மறைந்திடும்மவ்வடிவதுவும்
அருள்வடிவதனின்மறைந்திடுமந்த
வருள்வடிவதுவுமச்சிவத்தில்
தெருள்வடிவானசத்தியாய்முன்போற்
றிகழுமென்றசியுரைத்திடுமே.


### "வித்தக"ச் சந்தா நேயருக்கு விண்ணப்பம்.

எமது இரண்டாம் வருட "வித்தக" சந்தாவை பின்வரும் விலாசத்துக்குத் தயைகூர்ந்து அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேம்.

இங்ஙனம்

ரா. நாகரத்தினம்.
வித்தகம் ஆபீஸ்,
புதுவை.


மருள்வடிவதற்குமஃதைநானென்றே
மன்னுஞ்சீவனுக்குமாதரவாய்
மருள்வடிவமுதம்புசித்திடுமதுவே
வயங்கிடுமற்றதையொருவி
அருள்வடிவமுதமூறிடவருந்தி
யஃதுமச்சீவனுங்கரைந்தே
அருள்வடிவதுவுஞ்சிவாங்கிசனும்மா
யமர்ந்துநின்றிடுநின்றபடியே.

(ஷைசெ. 32 ; 60.)

சத்தால் சித்தும் சித்தால் சத்தும் அறியப்பட்டன. சத்தாகிய மெய்யினிடத்தேயே அசைதலாகிய வினை காணப்பட்டது. ஆதலால் சத்தில்லாமல் சித்தில்லை. சித்தில்லாமல் சத்தில்லை; மெய்யில்லாமல் உயிரில்லை; உயிரில்லாமல் மெய்யில்லை என்னும் உண்மை பெறப்படுதல் கண்டுகொள்க. இவ்வுண்மை நன்கு யாப்புறுமாறு உவமான முகத்தால் இன்னும் சில கூறப்படும்.

(தொடரும்)


இனம்! இனம்!!

### சுத்த சாதகம்

துறவின் றன்மையையும், தேகம் சித்திபெற்றால் முத்தியுண்டாமென்பதன் றன்மையையும், சாதன சதுஷ்டயத்தின் றன்மையையும், மகாவாக்கியத்தின் பொருளையும், சொரூபானுபவத்தின் றன்மையையும், வேதாகமங்கள் கருத்துவகையால் வேறுபாடின்றி யிருக்கும் வகையையும், தத்துவஞானதிற்குப் பரம்பரா சாதனமாயுள்ளவைகளின் றன்மையையும், உள்ளங்கை நெல்லிக்கனிபோல் செப்பமாக விளக்கியுள்ள இந்நூலை துக்க நிவர்த்தியிலும் பரமாநந்தப் பிராப்தியிலு மிச்சையுள்ள ஒவ்வொருவரும் அத்தியாவசியமாய் அறிய வேண்டியதென்பது குன்றின் மேலிட்ட விளக்காம்.

வேண்டுவோர் தபால் முத்திரை செலவுக்கு உரிய 6 சதம் ஸ்டாம்பு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

நந்தி வெளியீட்டு மன்றம்.
புதுவை.

### "வித்தகம்"
### சந்தா விவரம்.

வருட சந்தா

உள் நாட்டிற்கு முன் பணம் ரூ. 3 0 0
வெளி நாட்டிற்கு ,, ,, ரூ. 4 0 0

வித்தக நிலையம்,
புதுச்சேரி.

# *** ஈழநாடும் தமிழும். ***

யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவன்
**வித்துவான் ப்ரம்மஸ்ரீ சி. கணேசையர்**
அவர்கள் எழுதியது.

(பதிப்புரிமை கட்டுரை ஆசிரியர்க்கே உரியது.)

(தொகுதி 2. 2-ம் வாரத் தொடர்ச்சி.)

## ஆறுமுக நாவலர்.

இவர் தமது பிரசங்கத்தால் சைவ சமயத்தை விருத்தி செய்து வரும் போது, தமிழ்க் கல்வியையும் விருத்தி செய்ய விரும்பி, வண்ணார் பண்ணையிலே கலியாப்தம் சகூநுய க்குச் சமானமான கீலக வருஷம் ஆவணி மீ ௩ம் திகதியில் சைவப்பிரகாச வித்தியாசாலை என்னும் பெயரோடு ஒரு வித்தியாசாலையைத் தாபித்துத் தாமும் அதில் ஓராசிரியராக விருந்து இலக்கிய இலக்கணங்களையும் சமய நூல்களையும் கற்பித்து வந்தனர். அக்காலத்து இவரிடம் படித்தவர்கள் மேற்காட்டியவர்களுள் — திருஞானசம்பந்தப்பிள்ளை, கயிலாச பிள்ளை முதலாயினோராவர். இவ்வித்தியாசாலையைத் தாபித்த பின்பு சிதம்பரத்திலும் ஓர் வித்தியாசாலையைத் தாபித்தனர். இவ்விரண்டும் இப்போதும் நன்கு நடைபெற்று வருகின்றன.

வண்ணார்பண்ணையிலே வித்தியாசாலையைத் தாபித்த பின்னர்த் தம்மால் புதிதாக இயற்றப்படுவனவும் திருத்தப்படுவனவுமாகிய புஸ்தகங்களையும் தம்மால் எழுதப்படுந் துண்டுப் பத்திரிகைகளையும் அச்சிட்டு வெளிப்படுத்தும்படி ஓர் அச்சியந்திரசாலையையும் தாபித்தனர். அவ் வச்சியந்திரம் தமது வேலைக்குப் போதாமையினாலே சில வாண்டுகளின் பின் அதனை விற்றுவிட்டுச் சென்னையிலே இப்போதும் நடந்து வருகின்ற அச்சியந்திரசாலையைத் தாபித்தனர்.

இவரால் புதிதாக இயற்றப்பட்ட நூல்களாவன :— முதற்பாலபாடம், இரண்டாம் பாலபாடம், நான்காம் பாலபாடம், முதற் சைவ வினாவிடை, இரண்டாம் சைவ வினாவிடை, இலக்கண வினாவிடை, இலக்கணச் சுருக்கம், பெரிய புராண வசனம், திருவிளையாடற் புராண வசனம், சிதம்பரமான்மியம், கோயிற்புராணவுரை, சைவ சமய நெறியுரை, நன்னூற்காண்டிகையுரை முதலாயின.

இவரால் திருத்தப்பட்ட நூல்களாவன:- கந்தபுராணம், பெரியபுராணம், சேதுபுராணம், திருக்குறள் பரிமேலழகருரை, திருக்கோவையுரை, தொல்காப்பியம் சேனாவரையருரை, இலக்கணக் கொத்து, தொல்காப்பியச் சூத்திர விருத்தி, பிரயோகவிவேகம், தருக்கசங்கிரகவுரை, நன்னூல் விருத்தியுரை முதலாயின. இன்னும் கிறீஸ்து மத கண்டனங்களும் பிறவும் இவரால் எழுதப்பட்டுள்ளன.

இவற்றுள் திருக்குறள் பரிமேலழகருரை, திருச்சிற்றம்பலக்கோவையுரை. தருக்கசங்கிரகவுரை முதலாயின இராமநாதபுரம் ஸ்ரீ மாந்-பொன்னுசாமித் தேவரவர்கள் விரும்பியவாறு அவர் உதவிய பொருள் கொண்டு இவராற் பதிப்பிக்கப்பட்டன. இந்நூல்களுக்கு இவர் நண்பராய் விளங்கிய திருவாவடுதுறை ஆதீனத்து மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையும் பிறரும் சிறப்புக் கவிகள் அளித்துள்ளார்கள். அக்கவிகளுள் மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் இவரைப் புகழ்ந்து மிகப்பாராட்டி கூறிய சில கவிகளை இங்கே காட்டுதும் :—

"மன்னுபெருந்தமிழ்ப்பாடையிலக்கணமுமிலக்கியமும்வரம்பு
[கண்டோன்
பன்னுசிவபுராணங்கள்பலதெரிந்தோன்சிவாகமநூற்பரவை
[மூழ்கி
உன்னுமனுபூதியெனும்விலைவரம்பிலாமணியையுறக்கொண்டுள்
[ளான்
இன்னுநயகுணத்தினனாய்சைவமெனும்பயிர்வளர்க்குமெழிலி
[போல்வான்."

"நீடுபுகழ்த்திருக்கேதீச்சரந்திருக்கோணாசலமிந்நிலவாநின்ற
நாடுபுகழ்த்தலம்பொலியாழ்ப்பாணத்துநல்லூர்வாழ்நகராக்
[கொண்டோன்
தேடுபுகழுருவமைந்தகந்தவேடவத்துதித்தசெல்வன்யாரும்
பாடுபுகழாறுமுகநாவலனவ்வாறச்சிற்பதிப்பித்தானே."

இவராற் பரிசோதிக்கப்பட்ட சேனாவரையருரை சி. வை. தாமோதரம்பிள்ளையவர்களால் பதிப்பிக்கப்பட்டது.

இலக்கணக் கொத்து, தொல்காப்பியச் சூத்திர விருத்தி முதலாயின அக்காலத்துத் திருவாவடுதுறையாதீனத்துச் சந்நிதானமாயிருந்த ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரவர்கள் விரும்பியவாறு இவராற் பதிப்பிக்கப்பட்டன.

பெரும்பாலும் பிழையின்றிப் புத்தகங்களை அச்சிடுவதில் இவர்க்கு நிகராவர் பிறரிலர்.

இவர் யாழ்ப்பாணத்திலன்றி இந்தியாவிலும் ஆங்காங்குள்ள ஆலயங்களிலும் ஆதீனங்களிலும் பற்பல பிரசங்

## ஸர். ஜகதீச சந்திர வஸு அவர்கள் செய்த பிரசங்கம்.

(தொகுதி 2. 1-ம் வாரத் தொடர்ச்சி.)

உடனே கர்ணன், "யாது சொன்னாய் நீ! நானே என் பிதாமஹன், மாதா மஹன், அனைவருமாவேன். என் கைத்திறத்தால் நானே அந்த உயர் குடி பிருதைப் பெறுகின்றேன் பார்," என்று சபதங் கூறினான். இக் கதையில் தான் மனிதன் விதியைக்கூட மதியால் வென்று, நல் லதிர்ஷ்ட மென்னும் தெய்வ மடந்தை தானே வந்து பணிந்து நின்று தன்னை ஏற்றுக் கொள்ளும்படி சரணாகதி யடையச் செய்யும் ஆற்றலையுடையானென்னும் தீரமொழியை முதன் முதல் உறுதியுடனுரைத்தனன் போலும். நீ அடியோடு அயலார் உதவியை நாடி அவர்களே கதியென நம்பிக் கிடப்பாயாயின், உனது வாழ்வு கேவலம் மானமற்ற பராதீனம், பதரின் பாலதாகும். வலு, தீரம், உரம், அனைத்துக்கும் போராட்டமே நற்றாயாகும். உனது கையே உனக்கு உதவுதல் வேண்டும். உன் வலியைக் கொண்டே நீ கோரிய பொருளைக் கைக்கொளல் வேண்டும். அன்னியன் கையை எதிர்பார்த்து நில்லாது, உனது சொந்த ஆற்றலையே துணையாக் கொண்டுபோர் புரியப் புரிய உனதுஆற்றல் அளவு கடந்ததாகி உனக்கு ஜயத்தைப் பயக்கும். வித்தை சம்பந்தமான துறைகளிற் கூட ஒரு முறை இரு முறைமும்முறையெனப்பலமுறையும் தோல்வியடைந்தும், மனோ திடத்தைக் கைவிடாது, எத்தகைய ஆபத்துக்களையும் சங்கடங்களையும் பொருட்படுத்தாது, கொண்ட நோக்கமே பெரிதாக நினைத்துப் பொருது கரையேறினோர்களால் தான் சிறந்த உண்மைகள் வெளிப்படுத்தப் பட்டிருக்கின்றன.

### ஜயாபஜயம்

விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சி தீக்ஷையைக் கொண்டவனுடைய பாதை ராஜ மார்க்க மன்று. அவனுக்குச் சுகங் கிடையாது, நல்லுடை கிடையாது, நல்லுணவு கிடையாது, சதா கஷ்டம் தான், சதா போராட்டந்தான். ஜயத்தையும் அபஜயத்தையும் லாபத்தையும் நஷ்டத்தையும் ஒரு பொருட் பலகிளவிகளெனக்கொண்டு, தன்னுடைய வாழ்க்கையையே மகா பலியாக அவன் தியாகஞ் செய்து விடவேண்டும். எளிதில் கிடைக்கக் கூடிய ஜயமாவது லாபமாவது அல்லது எளிதில் செய்து முடிக்கக் கூடிய தொழிலாவது சுத்த வீரன் மனதுக்குப் பிடிப்பதில்லை. எட்டாத சந்திர பிம்பத்தைப் பிடித்துப் பந்தாட எண்ணி அந்த நாட்டத்தில் அவன் படும் அவஸ்தைகளும் அப ஜயங்களும் அவன் மனதைக் கவர்வன. அவைகளே அவனுக்கு மனோஹரமானவை. அபஜயக்கொடியேகண்ணுக்குப்புலபட்டுக் கொண்டிருக்கும் படியான சில பிரயத்

---

கங்கள் செய்துள்ளார்கள். ஆங்கும் இவர் பிரசங்கத்தைப் புகழாதாரிலர். இவர் திருவாவடுதுறை ஆதீனத்திலே பிரசங்கஞ் செய்தபோது அங்கு அதனைக் கேட்டு மகிழ்ந்த ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிகர் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிகரென்னும் உபய சந்நிதானங்களாலும் மற்றை வித்துவான்களாலுமே "நாவலர்" என்னும் சிறப்புப் பெயர் இவருக்கு அளிக்கப்பட்டதென்றால் இவர் பிரசங்கத்தின் அருமை பெருமைகள் இத்துணைய என எம்மால் அளவிடமுடியுமா?

இராமநாதபுரம் பொன்னுச்சாமித் தேவரவர்களும் இவரை விரும்பி அழைத்துத் தமது சபையிலே பிரசங்கஞ் செய்வித்து, அதனைக் கேட்டு மகிழ்ந்து இவருக்குப் பல விருதுகள் அளித்தனர்.

இத்தகைமை வாய்ந்த நாவலரவர்கள் சாலிவாகன சகாப்தம் ௧௮௱௨க்குச் சமானமான பிரமாதி வருடம் கார்த்திகை மாதம் ௨-ம் திகதி சுக்கிரவாரத்திலே இவ்வுலக வாழ்வை ஒருவினர்.

வாக்கிய நடை எழுதுவதில் இவருக்குச் சமமான வரில்லை. தமிழ் வாக்கியங்களுக்குக் குறியீடுகள் இட்டு எழுதத்தொடங்கியவரும் இவரென்றே சொல்லலாம். செய்யுள் நூல்களை இவரியற்றாவிட்டாலும் செய்யுளியற்றுவதிலும் இவர் மிகு சாமர்த்திய முடையவர். அதனையுணரும் பொருட்டு இவரியற்றிய செய்யுளொன்றையீண்டுத் தருதும்:—

சீர் பூத்த கருவிநூ லுணர்ச்சி தேங்கச்
சிவம் பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார் பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம் பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர் பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறை பூத்த சடைமௌலிப் பிரானார் தந்த
வார் பூத்த வறிவிச்சை தொழிலென் றோதும்
மதம் பூத்த விநாயகன்றாள் வணங்கி வாழ்வாம்.

இவருடைய விரிந்த சரிதத்தை நல்லூர் ஸ்ரீமாந், த. கயிலாசபிள்ளை அவர்கள் எழுதிய "ஆறுமுக நாவலர் சரித்திரம்" என்னும் நூலாலும், அருணாசல கவிராயர் பாடிய "ஆறுமுகநாவலர் புராணத்தாலும்" அறிந்து கொள்க."

ணங்கள் மாண்டு மடிந்ததாகக் கருதப்பட்ட பின்னரும் மறுபடியும் மறுபடியும் அவைகளைப் புத்துயிர் பெற்று எழுந்துலவச் செய்யும் அரிய ஆற்றலின் அந்தரங்கம் யாது? அது எங்குளது? நாம் சற்று நிதானித்துக் கவனிப்போமானால், காரணத்துக்குப் பின் காரியம் எவ்வாறு அவசியம் ஏற்பட்டேயாக வேண்டுமோ, அவ்விதமே யாகும் அபஜயத்தை யடுத்ததுபோல் ஜயமும். நாம் ஜயமெனப் பேரிகை கொட்டி முழங்கும் காரியத்தின் தோற்றம் நெடுங்காலங் கழித்துத் தோன்றுவதன் முன் மறை சக்தியாய் நின்று இயக்க வேண்டிய ஆதி பராசக்தியே யாகும் அபஜயம் என்ற உண்மையை நாம் கரதலா மலகம் போல் காணுவோம்.

### விஞ்ஞாந சாஸ்திரவுண்மையைக்
### கண்டறிவதற்கு
### இன்றி யமையாத நிபந்தனைகள்.

கலைமகளின் பிரஸாதத்தைப் பெற்று அறிவை விசாலப் படுத்திக் கொள்வதற்குப் பல்வேறு நிபந்தனைகள் இன்றியமையாதனவாகும். முதல் ஆவசியகம் அபார கற்பனா சக்தியாகும். ஏனெனில் பிரதி ஆராய்ச்சிப் பிரயத்தனமும் முதல் முதல் அதன் சகல விதமான அங்கங்களுடனும் வெகு நுட்பமாகக் கோசரமாக வேண்டிய இடமான மனிதனுடைய மனமே பிரதான ஆராய்ச்சிசாலையாய் நிற்கிறது. தெள்ளிய தரிசனமும் தோற்றமுமின்றி, குருடன் மாங்காய் விழ மாத்திரைக் கோலை யெறிந்ததொப்பச் செய்யப்படும் ஆராய்ச்சிகள் பயனற்றனவாகும். இந்திய மனத் தத்துவம் கேவலம் மனக் கோட்டைகள் கட்டும் அபார கற்பனா சக்தியில் அகப்பட்டு உழலுகின்ற தன்மையதாகையால், இந்தியாவில் விஞ்ஞாந சாஸ்திர நுண்ணிய ஆராய்ச்சிக்கிடமே இல்லை யென நினைக்கப்பட்டது. ஆனால் மேல் மயல் மாசியைப் பார்க்குங்கால் தம்முள் முரண்படுபவனவாய் வகைதொகையற்று ஓரே கந்தரகோளமாகத் தோற்றும். குப்பையினின்று ஒரு நூதன உள்ளுண்மையையும் ஒழுங்கையும் வகுக்கக் கூடிய இந்த அபார தீவிர கற்பனா சக்தியை சிந்தனை, தியானம் என்னும் வழக்கத்தினால் ஓர் அளவுக்குள், ஓர் எல்லைக்குள் அடக்கி வைப்பது சாத்தியமான காரியமே. ஒருவன் ஒரு விருக்ஷத்தின் வாழ்க்கையினுடைய அந்தரங்கத்தைக் கண்டறிய வேண்டுமாயின் அவன் அவ்விருக்ஷத்துடன் விருக்ஷத்தோடு விருக்ஷமாய்ப் பேத மறக் கலந்து நின்று அதனுடைய துருதுருப்பான உயிர் நிலையின் துடி துடிப்பைக் கண்டறிதல் வேண்டும். இது கேவலம் முதற்படியேயாகும். அடுத்த படியாக, சிறிதளவும் பிசகுதல் இல்லாத சாஸ்திர பரீக்ஷையெனும் நிச்சயமான வாயிலாகச் சென்று காணக்கூடிய உண்மைகளுடன் அவன் தன் யுக்தியோசனைகளாலெட்டிய விஷயங்களை ஒத்திட்டுப் பார்க்க வேண்டும். இவ்வாறு ஒரு கட்டுக்குள்ளும் எல்லைக்குள்ளும் கட்டுப் படுத்தாமல் போனால் கற்பனா சக்தியானது காடும் மலையும் கால்விட்டோடிக் கடைசியாகப் பித்தனுடைய சித்தாந்தங்களுக்கு அருகே சென்றுவிடும். ஒரு யந்திரக் குதிரை செய்து ஒரு வில்லை யழுத்தியவுடன் அது ஆகாயத்தில் வாயுவேகமாய்ப் பறந்து செல்வதை மனதில் கற்பித்துக்கொண்டால் எவ்வளவு ஸந்தோஷமாயிராது? உண்மையென்னும் உரைகல்லில் தேய்த்து மாற்றுப் பார்ப்பதெனும் பரீக்ஷையில்லை யெனில், மனதானது தனது ஸாமாந்ய புத்தி நிலையினின்று விலகிக் கடைசியில் உண்மைக்கும் வெறும் தோற்றத்திற்கும் வித்தியாசம் கண்டுபிடிக்க இயலாத பித்தனுடைய நிலை அல்லது மரண நிலைக்கு வந்துவிடுகிறது. பழையநாட்களில் நமது புத்திமான்கள் அனைவரும் தாங்கள் சொல்வதெல்லாம் சரி யென்ற மூடச் சித்தாந்தஞ் செய்யாது, அவனவன் புத்திக் கெட்டியவாறு நிர்ப்பந்தமில்லாமல் தாராளமாய்த் தனக்குத் தானே தீரத்தெளிய ஆராய்ந்தறிந் துண்மையைக் கண்டறியலாமென்ற ஸ்வதந்திர நிலையைப் பெரிதும் அப்பியசித்து வந்ததால் வேதங்கள்கூட உண்மையெனும் உரைகல் பரீக்ஷையில் பழுதுபடுமானால் ஒழிக்கப்பட வேண்டுமென்று அவர்கள் பயமில்லாமல் முறையிட்டார்கள். எவ்விஷயமும் பூதபௌதிகத்துக்கு அதீதமான விஷயமன்று. அதிசயமெனவும் மாயவித்தையெனவும் தோற்றுபவைகளெல்லாம் உண்மையில் தற்போது காரணம் விளங்காமையால் அவ்வாறு அழைக்கப்படுகின்றனவெனவும், விடா முயற்சியால் என்றைக்காவது அவைகள் சம்பந்தமான காரண காரிய தத்துவத்தைக் கண்டறியக் கூடுமென்பது அவர்களது திட நம்பிக்கை. இருபத்தைந்து நூற்றாண்டுகளுக்கு முன்னர் தக்ஷசில வித்தியாலயத்தில், ஜீவகனை அவனுடைய குரு அழைத்து அக்கம் பக்கங்களிலுள்ள எல்லாச் செடி கொடிகளுடைய குண குணங்களைக் கண்டறிந்து வாவென ஆஞ்ஞை யிட்டபோது, அக் குருவானவர் பிரத்யக்ஷாநுபவ பூர்வமாய் உண்மையைக் கண்டறியும் இம் மார்க்கத்தைத்தான் அவலம்பித்தனர். பண்டைக் காலத்து நமது வீர பூமியில் கண் மூடி மௌனியாயிருத்தலைப் போற்றவில்லை: கர்ம மார்க்கத்தைத் தான் பெரிதும் சிலாகித்துப் பேசினர்; அமர்க்களத்தில் தான் அஞ்ஞான காடாந்தகாரத்தை விலக்கிப் பரம் பொருளின் உண்மையை வெளிப் படுத்திய உபதேச மொழி இவ் வுலகத்தவர்க்கு அருளப்பட்டது.

(தொடரும்)

## அறிவிப்பு

சந்தாதார்களின்
அபிப்பிராயங்களுக்கு
அவர்களே பொறுப்பாளிகள்.

Imprimerie “VITTAGAM”— Pondichery. Le Gerant. R. Nagarattinam.